இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in  நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி  murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 108 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 11 – திங்கள்கிழமை 27 நவம்பர் 2023 – கோவை ★★ 60 பக்கங்கள்  Established: 10.8.1942 - Volume: 82 - Issue 108: Thiruvalluvar Year - 2054 - Karthigai 11 - Monday 27 November 2023 - Kovai ★★ 60 Pages ₹ 5.00


## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (5)

# அண்ணா பேச்சு, குற்றால அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இந்த மாநில ஆட்சிக்கான சட்டமன்றம், 1921-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12-ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டதாகும். அதனையடுத்து, முதல் மந்திரி சுப்பராயலு இயற்கை எய்தி விட்டதால், பனகல் அரசர் முதன் மந்திரியாகவும், சர்.கே.வி. ரெட்டி, சர்.ஏ.பி. பாத்ரோ ஆகியோர் துணை மந்திரிகளாகவும் பதவியேற்றனர். பனகல் அரசரின் ஆட்சிக் காலத்தில், திராவிடர்களுக்காக உருவாக்கப்பட்ட சாதனைகளைச் சொல்வதுதான் எனக்கு ஐந்தாம் வகுப்பில் வைக்கப்பட்ட "பனகல் அரசர்" என்ற சிறு நூலாகும்.

நீதிக்கட்சி சென்னை மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தபோது, சென்னையில் நடைபெற்ற மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஆறு தொழிலாளர் உயிரிழந்தனர். தொழிற்சங்கத் தலைவர்களான திரு.வி.க., பி.பி.வாடியா, சக்கரைச் செட்டியார், நடேச நாயக்கர், இ.எல். அய்யர் ஆகிய ஐவரையும், நாடு கடத்தும்படி கவர்னர் லார்டு வெலிங்டன் ஓர் அவசர ஆணை பிறப்பித்தார். இது கண்ட நீதிக்கட்சித் தலைவர் சர்.பி. தியாகராயர் கொதித்தெழுந்தார். தொழிற்சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் உத்தரவைக் கவர்னர் திரும்பப் பெறவேண்டும் என்றும், இல்லையேல் நீதிக்கட்சி மந்திரிசபை பதவி விலகும் என்றும் முடிவெடுத்து, இதனைக் கவர்னருக்கு அறிவித்ததோடு, மந்திரிகளின் பதவி விலகல் கடிதத்தையும் கவர்னர் கையிலே கொடுத்தார். நீதிக் கட்சியின் போராட்டத்தையும், நாட்டில் தோன்றிய கொந்தளிப்பையும் கண்டு, லார்டு வெலிங்டன், தொழிற்சங்கத் தலைவர்களை நாடு கடத்தும் ஆணையை உடனடியாகத் திரும்பப் பெற்றார்.

1923-ஆம் ஆண்டு நவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் வந்தது. இதிலும் நமது நீதிக் கட்சியே வெற்றி பெற்றது. பனகல் அரசரை முதல்வராகக் கொண்டும், சிவஞானம் பிள்ளை, ஏ.பி. பாத்ரோ ஆகிய இருவரையும் துணை அமைச்சர்களாகக் கொண்டும் அமைச்சரவை உருவாக்கப்பட்டது. பேராசிரியர் எம். ரத்தினசாமி சட்டசபைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மூன்றாவது பொதுத் தேர்தலுக்கு முன்பே,

1925-ஆம் ஆண்டு சூன் திங்கள் 29-ஆம் நாள் திராவிடர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த தியாகராயர் இயற்கையின் மடியில் நீங்காத் துயில் கொண்டார். அதன் பின்னர், பனகல் அரசர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1926-ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் பொதுத் தேர்தலில், எஸ்.சீனிவாச ஐயங்கார் தலைமையில், சுயாட்சிக் கட்சி என்னும் பெயரில் காங்கிரஸ் கட்சி, நீதிக் கட்சியை எதிர்த்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வென்றது. ஆனால், மந்திரி சபை அமைக்க அது முன்வரவில்லை. பெரும்பான்மையற்ற நிலையில், பிறர் உதவியுடன், மந்திரி சபை அமைக்க பனகல் அரசரும் மறுத்து விட்டார். எனவே, டாக்டர் சுப்பராயனுடைய மந்திரி சபை அமைந்தது.

## கலைஞர் கடிதம்

மாநிலங்களுக்கு முழு சுயாட்சி தரப்பட வேண்டும் என்று ஆங்கிலேய அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றைப் பனகல் அரசர் தலைமையில் நீதிக்கட்சி நிறைவேற்றியது. ஆனால், கட்சிக்கும் நாட்டிற்கும் பேரிழப்பாக 1928-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ஆம் நாள் பனகல் அரசர் உயிர் துறந்தார். இவரது பிரிவால் நாடு கண்ணீர் வடித்தது. நாயரும், தியாகராயரும், பனகல் அரசரும் வரிசையாக மறைந்துவிட்டதால் நீதிக்கட்சி கலகலத்து நின்றது.

**பனகல் அரசருடைய காலத்தில்தான் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கிடையில், காங்கிரசை வளர்க்கும் பெரும் தூணாய் இருந்த தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், 1926-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். 'குடியரசு' என்னும் வார ஏட்டின் மூலம் பகுத்தறிவுச் சுடர் விடும் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் வெளி வந்தன.**

**ப.ஜீவானந்தம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சௌந்திரபாண்டியன், குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார், சிங்காரவேலர், கைவல்ய சாமி, எஸ்.ராமநாதன் போன்ற பலர் பெரியாருக்குத் துணையாக நின்று சுயமரியாதைக் கருத்துக்களைச் சூறாவளி வேகத்தில் தமிழகத்தில் பரப்பி வந்தனர். 1930-ஆம் ஆண்டில் சென்னையில், 'சுயமரியாதை இளைஞர் கழகம்' ஒன்று தொடங்கப் பெற்றது. அப்போது பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்த அண்ணா அவர்கள், இந்த இளைஞர் மன்றத்தில் வாரந்தோறும் சொற்போர் பட்டியலில் இடம் பெற்றுக் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கி வந்தார்.**

1930-இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று, திவான் பகதூர் முனுசாமி நாயுடு தலைமையில் பி.டி.இராசன், குமாரசாமி ரெட்டியார் இருவரையும் துணை மந்திரிகளாகக் கொண்ட அமைச்சரவை அமைக்கப் பெற்றது. இந்தச் சமயத்தில்தான் பெரியார் அவர்கள், தமிழர்களின் அரசியல் முன்னேற்றம் கருதி ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதை நீதிக் கட்சி ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். அதனை அந்தக் கட்சியும் ஒப்புக் கொண்டதால் பெரியார், நீதிக் கட்சியுடன் இணைந்து பணிபுரியத் தலைப்பட்டார்.

1932-இல் நீதிக் கட்சித் தலைவர் முனுசாமி நாயுடு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் தொடர்பாகத் தஞ்சையில் கூடிய மாநாட்டில் பொப்பிலி அரசர் கட்சியின் தலைவராகவும், முறைப்படி முதல் மந்திரியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். மூன்று ஆண்டுக் காலமே இந்த மந்திரி சபை நடைபெற வேண்டுமெனினும் சைமன் கமிஷனுடைய அறிக்கை வெளிவரக் காலம் தாழ்ந்ததால் இந்த மந்திரி சபையின் உயிர் ஏழு ஆண்டுகள் நீடித்தது. அந்தக் காலத்தில்தான் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியாரும், தஞ்சைத் தங்கம், தமிழ்ச் சிங்கம், சர் ஏ.டி.பன்னீர் செல்வமும் இடையே அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

1936-ல் சைமன் கமிஷன் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின்படி நடந்த பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி அடியோடு வீழ்ச்சியடைந்து விட்டது.

1937-இல்தான் காங்கிரஸ் மந்திரிசபை முதன் முதலாகச் சென்னை மாநிலத்தில் பதவி ஏற்றுக் கொண்டது. இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி நேரிடையாகப் பங்கு கொண்டதால் சுயராஜ்யக் கட்சி மறைந்து ஒழிந்தது. காங்கிரஸ்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## முன்னாள் இந்தியப் பிரதமர்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்கிற்கு சென்னையில் சிலை!



## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, நவ. 27-**

**முன்னாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருச்சிலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்.**

தமிழ்நாடு அரசின் சார்பில், மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை, மாநிலக் கல்லூரியில் ரூபாய் 52 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (27.11.2023) காலை 11.00 மணியளவில் அன்னாரது திருவுருவச் சிலை யினை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார்கள்.

விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள் 1931-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள் அலகாபாத் நகரில் ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாக பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை டேராடூன் கர்னல் பிரவுன் பள்ளியிலும், பின்பு புனே பெர்குஷன் கல்லூரியில் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார். பின்பு, 1950 ஆம் ஆண்டு அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று பட்டம் பெற்றார். மேலும், இவர் சட்டக் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து, சர்வோதய சமாஜத்தில் இணைந்து, பூமிதான இயக்கத்தில் பங்கெடுத்து தனது நிலங்களை தானமாக வழங்கினார்.

வி.பி.சிங் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற



உறுப்பினர், வர்த்தகத் துறை துணை அமைச்சர் போன்ற பல்வேறு பதவிகளையும் வகித்தார். இதனைத் தொடர்ந்து, 1980-ஆம் ஆண்டு உத்திரபிரதேசத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று உத்திர பிரதேச மாநில முதலமைச்சராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நல்ல திட்டங்களை கொண்டு வந்து சிறந்த முதலமைச்சராக திகழ்ந்தார்.

இதனைத் தொடர்ந்து, வி.பி. சிங் அவர்கள் 1984-ஆம் ஆண்டு நிதியமைச்சர் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய பதவிகளையும் வகித்தார். பின்பு, 1989 - ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதமராக இருந்த போது தமிழ்நாட்டு மக்களின் வாழ்வதார பிரச்சனையான காவிரி நதி நீர் பிரச்சனைக்கு தீர்ப்பாயத்தை அமைத்து தந்தார். சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டினார். அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வி.பி.சிங் அவர்களை பற்றி குறிப்பிடும் போது "அரசியல் நாகரீகத்துக்கும், பண்பாட்டுக்கும், உயர்ந்த லட்சியங்களுக்கும் அடையாளச் சின்னமாக விளங்கியவர்" என்று கூறினார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக B.P. மண்டல் அவர்கள் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால் சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்திற்கு அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை செயல்படுத்திய சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் ஆவார்.

இத்தகைய சிறப்புமிக்க மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் அன்னாரது திருவுருவச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் உத்திரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், அமைச்சர் பெருமக்கள், அன்னாரது குடும்பத்தினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.